# "எடப்பாடி கூறுவது பதில் அல்ல - பச்சைப் பொய்!"

**12.4.2026 - ஞாயிற்றுக்கிழமை அன்றைய 'தி இந்து - தமிழ்திசை' நாளிதழுக்கு எடப்பாடி பழனிச்சாமி அளித்த சிறப்புப் பேட்டியில், "ஸ்டாலின் ஆட்சியில் தமிழகம் பல துறைகளில் முன்னணி மாநிலமாக இருப்பதாக உங்கள் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வின் மத்திய அரசே சான்றிதழ் தந்திருக்கிறதே" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு - எடப்பாடி பழனிச்சாமி அளித்த உண்மைக்கு மாறான பதிலை யொட்டியும் - அதனை மறுத்தும் 'விடுதலை' நாளிதழ், "எடப்பாடியார் கூறுவது பதில் அல்ல - பச்சைப் பொய்!" எனத் தலைப்பிட்டு, கருத்து விளக்கம் ஒன்றை அளித்துள்ளது. ஆதாரங்கள் பலவற்றுடன்**

அதன் விவரம் வருமாறு :-

**கேள்வி :** நீங்கள் என்னதான் திமுகவை குறை சொன்னாலும், ஸ்டாலின் ஆட்சியில் தமிழகம் பல துறைகளில் முன்னணி மாநிலமாக இருந்ததாக உங்கள் கூட்டணிக் கட்சியான பாஜகவின் மத்திய அரசே சான்றிதழ் தந்திருக்கிறதே?

**பதில்:** சான்றிதழைக் காட்டுங்கள் பார்க்கலாம். முதலமைச்சர் அவிழ்த்து விடும் புளுகு மூட்டைகளையே நீங்கள் கேள்வியாக்கியுள்ளது ஏற்கத்தக்கதல்ல.

'இந்து தமிழ்த் திசை' (12.4.2026 பக்கம் 9)

**'இந்து தமிழ் திசை' நாளேட்டின் கேள்விக்கு அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார். இது பதில் அல்ல பச்சைப்பொய் என்பதுதான் உண்மை!**

**தமிழ்நாடு அரசின் சாதனைகள்பற்றி ஒன்றிய அரசு ஒப்புக் கொள்ளவில்லையா?**

**உண்மை நிலை இதோ!**

## 'விடுதலை' தோலுரிப்பு!

2021 ஆம் ஆண்டு மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், "திராவிட மாடல்" ஆட்சியின் கீழ் பல்வேறு முன்னோடி நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் பல திட்டங்கள் ஒன்றிய அரசு மற்றும் அதன் தன்னாட்சி அமைப்புகளான நிதி ஆயோக் (NITI Aayog) ஆகியவற்றின் பாராட்டு களையும், உயர் தரவரிசைகளையும் பெற்றுள்ளன.

ஒன்றிய அரசு மற்றும் தேசிய அளவிலான அமைப்புகள் பாராட்டிய முக்கியமான திட்டங்களின் விவரங்கள்

1. 'இல்லம் தேடிக் கல்வி' கரோனா பேரிடர் காலத்தில் மாணவர்களிடையே ஏற்பட்ட கற்றல் இடைவெளியைக் குறைக்க கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தை ஒன்றிய கல்வி அமைச்சகம் வெகுவாகப் பாராட்டியது.

'இது போன்ற ஒரு தன்னார்வலர் அடிப்படை யிலான கற்றல் முறை மற்ற மாநிலங்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டி' என்று ஒன்றிய அரசு குறிப்பிட்டது.

2 லட்சத்திற்கும் அதிகமான தன்னார்வலர்கள் மூலம் சுமார் 34லட்சம் மாணவர்கள் பயனடைந்தனர்.



### 'மக்களைத் தேடி மருத்துவம்'

சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களுக்கு வீட்டிற்கே சென்று மருந்து வழங்கும் இத்திட்டம் தேசிய அளவில் கவனம் ஈர்த்தது.

2022இல் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் நடத்திய "பொது சுகாதார அமைப்புகளில் சிறந்த நடைமுறைகள்" குறித்த தேசிய மாநாட்டில் இத்திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு கோடிக்கும் அதிக மானோர் பயனடைந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

### காலை உணவுத் திட்டம்

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் இத்திட்டம் உலகளாவிய கவனத்தைப் பெற்றதுடன், ஒன்றிய அரசின் பல்வேறு கொள்கை முடிவெடுப்பவர்களால் பாராட்டப்பட்டது.

இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு பள்ளிகளில் மாணவர்களின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தெலங்கானா போன்ற மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்ற ஆர்வம் காட்டின.

### நான் முதல்வன்

மாணவர்களின் தனித்திறனை மேம்படுத்தி அவர்களை வேலைவாய்ப்பிற்குத் தகுதியானவர் களாக மாற்றும் இத்திட்டத்தை ஒன்றிய திறன் மேம்பாட்டு அமைச்சகம் கவனித்து பாராட்டி யுள்ளது.

### நிதி ஆயோக் மற்றும் ஒன்றிய அரசின் தரவரிசைகள்

ஒன்றிய அரசின் பல்வேறு குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடங்களைப் பிடித்துள்ளது:

SDG (நிலையான வளர்ச்சி இலக்குகள்): நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் குறியீட்டில், வறுமை ஒழிப்பு, கல்வி மற்றும் ஆரோக்கியம் ஆகிய பிரிவுகளில் தமிழ் நாடு முன்னிலை மாநிலமாகத் திகழ்கிறது.

நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார் நிலை குறியீடு 2022இல் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பிடித்தது.

## கருஞ்சட்டை

பெரிய மாநிலங்களின் பட்டியலில் சுகாதாரம் மற்றும் மருத்துவக் கட்டமைப்பில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் மூன்று இடங்களுக்குள் இருந்து வருகிறது.

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' பெண்களுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை நாட்டின் மிகப்பெரிய நேரடி பணப் பரிமாற்றத் திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

'புதுமைப் பெண் திட்டம்' மாணவிகளுக்கு உயர் கல்விக்காக மாதம் ரூ.1,000 அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரி சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 27% அதிகரித்துள்ளது

மின் ஆளுமை (eGovernance)டிஜிட்டல் சேவைகள் டிஜிட்டல் இந்தியா விருதுகளில் தமிழ் நாடு அரசு பலமுறை விருதுகளை வென்றுள்ளது.

சுகாதாரதுறை திட்டங்கள் குறிப்பாக கருப்பை புற்றுநோய் தொடர்பான தமிழ்நாடு அரசின் தடுப்பூசித்திட்டத்திற்கு ஒன்றிய அரசு பாராட்டு தெரிவித்து மட்டுமல்லாமல், தாங்களே அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதாகவும் அத்தோடு அனைத்து மாநிலங்களிலும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (20.02.2026)

பல மாநிலங்களின் அரசுத்துறை செயலாளர்கள் தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித்துறை, சுகாதாரம் மற்றும் உள்ளாட்சி வளர்ச்சித்திட்டங்களை நேரில் வந்து ஆய்வு செய்து சென்று அறிக்கையாக வழங்கி பிற மாநிலங்களிலும் தமிழ்நாடு அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

### கடல் கடந்த காலை உணவுத்திட்டம்

முதலமைச்சர்ஸ்டாலின் 'காலை உணவுத்திட்டம்' கனடா மற்றும் பிரிட்டன் அரசுகளில் கவனத்தை ஈர்த்து தாங்களும் அந்தத் திட்டத்தினை நடை முறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. (**'தினமலர் 11.03.2025**)

எடப்பாடி பழனிசாமி கூறியது பதில் அல்ல பல்டியே! பச்சைப் பொய்யே!!

இவ்வாறு 'விடுதலை' நாளிதழ், எடப்பாடி பழனிச்சாமியின் பொய்க்கூற்றை தோலுரித்துக் காட்டி யுள்ளது.

---

### தமிழ்நாட்டை ஆளவேண்டும் என்ற கனவில்

# பா.ஜ.க. தலைவர்கள் எத்தனை முறை படையெடுத்தாலும் தாமரை மலராது!

## திண்டுக்கல்லில் - மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி பிரச்சாரம்!

திண்டுக்கல், ஏப். 14 –

தமிழ்நாட்டை ஆள வேண்டும் என்ற கன வில் பா.ஜனதா அரசு எத்தனை முறை பழனிக்கு காவடி எடுத்தா லும் தாமரை மலராது என்று மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்டு கட்சியின் தேசிய பொதுச்செயலா ளர் எம்.ஏ.பேபி பேசினார்.

திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிடும் செந்தில்குமார் போட்டியிடுகிறார். மேட்டுப்பட்டி புனித வியாகுல அன்னை தேவாலயத்தில் நடந்த பாஸ்கு திருவிழாவில் கலந்துகொண்டு, கிறிஸ்தவர்களி வர்களிடம் உதய சூரியன் சின்ன த்துக்கு வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்தார். பின்னர் மாலையில் நாகல்நகர் பகுதி யில் மதசார் பற்ற முற்போக்கு கூட்டணி, மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்டு கட்சி சார்பில் நடந்தபொதுக்கூட டத்தில் அவர் பங்கேற்றார்.

கூட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநகர செயலாளர் அரபு முகமது தலைமை தாங்கினார். சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் பிரபாகரன் முன்னிலை வகித்தார். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரிய சாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தேசிய பொதுச்செய லாளர் பேபி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பேசினர். இதில் பேபி. கழக வேட்பாளர் இ.பெ.செந்தில்குமாரை ஆதரித்து பேசினார்.

### மதரீதியாக மக்களைப் பிளவுப்படுத்தும் பா.ஜ.க.!

ஆர்.எஸ்.எஸ். பாசிச அமைப்புகளுடன் பிரதமர் மோடி கைக்கோர்த்து புது டெல்லியில் இருந்து தமிழ கத்தில் ஆதிக்கம் செலுத்த நினைக்கிறார். அவர்களை தி.மு.க. கூட்டணி வீழ்த்தும். மார்க்



சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சின்னத்தில் தி.மு.க. சின்னமான உதயசூரியனுக்கும் நட்சத்திரத் திற்கும் இயற்கையாகவே நெருங்கிய தொடர்பு உண்டு. ஆழமான பிணைப்பு உண்டு

அதுபோலதி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு இடையே கொள்கை ரீதி யாக ஆழமான பிணைப்பு உள்ளது. ஆனால் மத்திய பா.ஜனதா அரசோ சாதி, மதரீதியாக மக்களை பிளவுபடுத்தி பார்க்கிறது. வுபடுத்தி அவர்களுடன் தான் அ.தி.மு.க. கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கிறது. மாநில சுயாட்சி வேண்டும். மாநில அரசின் உரிமை களை பாதுகாக்க வேண்டும் என தி.மு.க.. கூட்டணி விரும்புகிறது.

ஆனால் அதற்கு மத்திய அரசு அதி கார பகிர்வுடன் இருக்க வேண்டும். பா.ஜனதா அரசு மாநிலங் களை உடைத்து மைகளை பறிக்க நினைக் த்து அதன் உரி கிறது. திருப்பரங் குன்றம் பிரச்சினையில் அயோத்தி யாக மாற்றிக் காட்டுவோம் என கூறி மத நல்லிணக் கத்தை சீர்கு லைக்க பார்த்தனர். ஆனால் மாநில அரசின் நடவடிக்கை, மத ஒற்றுமை அமைப்புகளால் அந்த முயற்சி தடுக்கப் பட்டது.

### தாமரை மலராது

மத்திய அரசு நியமிக்கும் கவர்னர்கள் மாநிலத்தில் சர்வாதிகாரம் செய்ய பார்க்கிறார்கள். இதை எதிர்க்கும் மாநிலங்களுக்கு நிதி விடுவிப்புதில்லை. தமிழகமும் அதற்கு விஜய் விளக்கு இல்லை. பழனி முருகனுக்கு காவடி, பால்குடம் எடுத்து வேண்டுதல் வைத்து நிவாரணம் தேடுவார்கள்.ஆனால் தமிழகத்தை ஆள வேண்டும். என்ற கனவில் பா.ஜனதா அரசு எத்தனை முறை காவடி எடுத்தாலும் இங்கு ஒருபோதும் தாமரை மலராது.

இவ்வாறு அவர் பேசி னார். கூட்டத்தில், மாநகர செயலாளர் ராஜாப்பா, மேயர் இளமதி,தி.மு.க. ஒன் றிய செயலாளர்கள் நெடுஞ் செழியன், வெள்ளி மலை, மாநகர பொருளாளர் சரவணன், பகுதி செயலாளர்கள் சூசை ராபர்ட், பஜ்ருல்ஹக், ராஜேந்திர குமார் திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தம் , முன் னாள் எம்எல்ஏபாலபாரதி, சச்சிதானந்தம், மாநகர காங்கிரஸ் தலைவர் மணிகண்டன் மணி கண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

# மருத்துவர் இராமதாசு ஐயா விரைந்து நலம்பெற விழைகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் விசாரித்தறிந்தார்!

**சென்னை, ஏப். 14 -**

**"மருத்துவர் இராமதாசு ஐயா அவர்கள் "விரைந்து நலம்பெற விழை கிறேன்" என்று அவரை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**சேலத்தில் தேர்தல் பரப்புரை யில் ஈடுபட்டிருந்தபோது உடல் நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் மருத்துவர் ஐயா டாக்டர் இராமதாஸ் அவர்களைத் தொலைபேசி வாயி லாகத் தொடர்பு கொண்டு நலம் விசாரித்தேன். அவர் நல்ல முறை யில் உடல்நலம் தேறி வருகிறார்.**

**மருத்துவர் ஐயா அவர்கள் முழு வதுமாக குணமடைந்து, விரைந்து தமது பொது வாழ்க் கைப் பணிகளைச் சிறப்புறத் தொடர்ந்திட வேண்டும் என விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி மற்றும் கழக வெற்றி வேட்பாளர் –எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். உடன் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் சுரேஷ், ஜெ.மனோகரன், ஏவிஆர்.கோபால்ராம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி.ஆர். சாரதி பெரியநாயகம் மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர்.



காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் திருமதி நித்யா சுகுமாரை ஆதரித்து காஞ்சிபுரம் மாநகராட்சி பிள்ளையார் பாளையத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் வாக்கு சேகரித்தார். உடன் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன். சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் சு.வெங்கடேசன், மண்டல குழு தலைவர் எஸ்.மோகன் உள்ளிட்ட மாநகர கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.